
JUNIOR POST (WEEKLY) Regd No. TN/MS (C) 1003/88



# ஆர்ட் போஸ்ட்





கே.எம். கோபால்

**கா**தில் கடுக்கண்... பெரிய மீசை... சிறிய தாடி... ஆழ்ந்து ஊடுருவும் கண்கள். 64 வயது தளர்ந்த உடலுக்குள் கலையின் ஆர்வம் – தமிழக அரசின் 'கலைச்செம்மல்' விருதுபெற்ற கே.எம்.கோபால் எனும் இந்தச் சிற்பியுடன் சிறிது நேரம் உரையாடினாலே போதுமானது. அவரது ஆழமான கலை ஆளுமையைப் புரிந்து கொள்ளலாம்.

மகாபலிபுரம் போகும் வழியில் ஈஞ்சம்பாக்கம் எனுமிடத்தில் வங்காள விரிகுடாக் கடலின் தங்க மணற்பரப்பில் இவரது வீடு சோழமண்டல ஓவியர் கிராமத்தில் அமைந்திருக்கிறது. வீட்டின் நுழைவாயிலே யாளி தலையுடன் கூடிய மரபுரீதியான ஓர் அழகுடன் வரவேற்கிறது.

தனது பட்டறையில் கலைப் படைப்பில் மும்முரமாக ஈடுபட்டிருந்த கே.எம்.கோபால், தன் கலை அரங்கில் வந்து அமர்ந்து உரையாடுகிறார். இதுவரை கண்டிராத விநாயக வடிவங்கள் பல ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் கலை அரங்கு முழுவதும் நிறைந்துள்ளன.

நவீன ஓவியரான கே.எம்.கோபாலைப் பொறுத்தமட்டிலும் நாம் நமது கலை மரபுகளைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்கிற கோபம் இருக்கிறது.

''தமிழர்களுக்குத் தொடர்ச்சியான ஓவிய மரபு இருக்கிறதா?'' என்று கோபாலிடம் கேட்டபோது, அவர் துடித்துப் போனார். மூச்சை உள்ளிழுத்து பெருமூச்சு விட்டார். புருவங்களை உயர்த்திப் பேசத் தொடங்கிவிட்டார்.

''தமிழ்ப் பெண் ஒருத்தி காலையில் படுக்கையை விட்டெழுந்தவுடன் என்ன செய்கிறாள்?

வேறெந்த வேலையைச் செய்யத் தொடங்கும் முன்னாலும், முதலில் காலையில் வாசலுக்கு நீர் தெளித்துக் கோலம் போட்ட பிறகுதான் தன் அன்றாட வேலைகளைச் செய்யவே தொடங்குகிறாள். இத்தகைய ஒரு மண்ணில் ஓவியப் பாரம்பரியம் பற்றிக் கேள்வி கேட்கலாமா?'' என்ற அவர் குரலில் வருத்தம் இருந்தது.

சென்னை ஓவிய, கைவினைக் கல்லூரியில் தேவிபிரசாத் ராய் சௌத்ரியிடம் ஓவியம் பயின்றவர் இவர். அந்நாளின் பிற ஓவியர்களைப் போலவே, வங்காளப் பாணி ஓவியங்களைச் செய்து வந்தார். இவரது 'டெம்பரா' வண்ண ஓவியங்கள் திருவிழா, கரகாட்டம், கிராமச் சந்தை போன்ற காட்சிகளைச் சித்திரித்தன. மக்களைக் கும்பலாகத் தீட்டும்போதும், அவர்களது குணவிசேஷங்களை நுட்பமான விவரணைகள் இல்லாமலேயே உடல் ரீதியான ஒரு பார்வை – மொழி மூலமாகவே காட்டிவிடும் வல்லமை பெற்றவர்.

இதன் பிறகு, இவரது ஓவியங்கள் நீர்வண்ணத்தில் அபூர்வப் பாணி ஒன்றை மேற்கொண்டன. சோப்பு நுரைகள் போன்ற அபூர்வமான பகுதிகளினூடாக 'தாந்திரீக' குறியீடுகளுடன் இவர் தன் ஓவியங்களைப் படைத்து வருகிறார்.

இவரது தற்கால ஓவியங்கள்/சிற்பங்கள் அனைத்திலும் மீண்டும் மீண்டும் தோன்றுவது விநாயகர் வடிவம். இதுகுறித்த இவரது ஆழ்ந்த தேடல் – 'அர்த்த கணேஷ்வரி', 'காயத்ரி கணேஷ்வரி', 'பஞ்சதத்துவ கணபதி', 'சர்ப்ப கணேஷ்' என்று நாம் இதுவரை கண்டிராத பல புதிய கணபதி வடிவங்களின் சிற்ப வெளிப்பாடாகத் திகழ்கின்றன.

'விநாயகர் வடிவமே ஓர் உடற்பயிற்சியின் – யோகத்தின் குறியீடு! யோகத்தில் ஒரு குரு, முதன்முதலாகக் கற்றுக் கொடுக்கும் யோகத்தின் குறியீடுதான் விநாயகர் வடிவம்' என்று குறிப்பிடுகிறார் இவர்.

விநாயகரின் துதிக்கை மூச்சுக்காற்றைக் குறிக்கிறது. இந்த உடற்பயிற்சியின்போது மூச்சுக் காற்றை சில நிமிடங்கள் உள்ளிழுத்து வயிற்றில் நிறுத்த வேண்டும். இதைக் காட்டவே வயிற்றைப் பெரிதாக அமைத்தார்கள். மூச்சை உள்ளிழுக்கிறபோது வலது கடைவாய்ப் பல்லைக் கடிக்க வேண்டும். இதைக் குறிக்கவே விநாயகர் வலது தந்தத்தை உடைத்துக் கையில் வைத்திருக்கிறார். விநாயகரின் யானைத் தலை 'ஓம்' எனும் மூல ஒலியின் குறியீடான எழுத்து வடிவில் அமைந்தது. இப்படி கே.எம்.கோபாலின் படைப்புகள் ஏராளமான உள்அர்த்தங்களை, தத்துவ விசாரங்களை உள்ளடக்கி இருக்கின்றன.

பிற ஓவியர்கள், 'இந்தியாவைப் போன்ற பழங்கலைச் சிறப்புமிக்க மண்ணில், நம் முன்னோர்கள் கலைச் சிகரங்களையெல்லாம் தொட்டுவிட்டார்கள். இவற்றை மீறி இனி நாம் செய்ய என்ன இருக்கிறது?' என்று மலைத்துப் போகலாம். ஆனால், கே.எம்.கோபால் ஓர் இளைஞனுக்கே உரிய உற்சாகத்துடன் இந்தப் பழம் மரபைத் தற்காலத்துக்காக விழிப்பு உணர்வுடன் மேலும் நீட்சிக்கிறார்.

இவரது விநாயகர் வடிவங்களை மதம் கட்டுப்படுத்துவது இல்லை. நவீன கலைக்கேயுரிய தனிமனித சுதந்திரத்துடன் இவர் தனது விநாயகர்களைப் படைத்து வருகிறார்.

'கௌமார கணபதி' எனும் உலோகப் புடைப்பு சிற்பத்தில், இந்து மதத்தின் பல்வேறு பிரிவுகளையும் ஒருங்கிணைத்து இருக்கிறார். 'ஓம்' எனும் எழுத்தே வயிறாக இருக்கிறது. உட்குவிந்த வயிற்றுப் பகுதிக்குள் 'காமாக்னி'யின் குறியீடாக நெருப்பு!

இவரது அண்மைக்கால உலோகத் தகடுச் சிற்பங்கள் நவீனப் போக்குகளைக் கொண்டவை. விநாயகர் வடிவத்தை மிகமிக எளிமைப்படுத்தி விடுகிறார்.

செம்புத் தகட்டை வெறுமனே மடக்கிவிட்டு யானை காதுகளாக்கி விடுகிறார். தலைக்கு மேல் சுடர்போல் மடிந்து உயர்கிற தகடு கிரீடம் ஆகிறது. உடலுக்கு என்று ஒல்லியான நீண்ட தகடு.

விநாயகருக்கே உரிய தொப்பைக்கூட இல்லை. ஆனால் வயிற்றின் முக்கியத்துவம் காட்ட, வயிற்றில் பச்சைநிறக் கல் ஒன்று பதிக்கப்பட்டுள்ளது.

இவரது படைப்புகள் 'தாந்திரீக கலை' என்ற தலைப்பில், மேற்கு ஜெர்மனியில் நடந்த கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. ஜப்பான் (1980), ஆஸ்திரேலியா (1982), ஆம்ஸ்டர்டாம் (1988), நெதர்லாந்து (1989) ஆகிய நாடுகளில் நடந்த கண்காட்சிகளிலும் பங்கேற்றுள்ளன.

உலக நாடுகள் பல சுற்றிய கே.எம்.கோபாலின் ஆழமான நம்பிக்கை இதுதான்:

'ஏதாவது ஒரு சிறந்த கருத்தைத் தன் மூலமாக வெளிப்படுத்தாத கலை, இந்தியத்தனத்துக்கே எதிரான கலை!'

– இந்திரன்

---

முன்பக்கத் தொடர்ச்சி...

மற்றும் அதன் சுற்றுவட்டாரத்துக்குத் திடீரென்று பெரும் பளபளப்பு கிடைத்துள்ளது என்னவோ உண்மை! நவீனச் சாலைகள், அதிவேக ரயில்கள், நவீனத் தொடர்புத்துறை என்று அங்கு பல வசதிகள்! எக்ஸ்போ – 92 தங்கள் நாட்டுக்குப் பெரிய திருப்புமுனை என்று ஸ்பெயினில் பலர் கருத்துத் தெரிவித்தாலும், இன்னொரு சாரார் அதை ஏற்கவில்லை.

''எக்ஸ்போ முடிவடைந்தவுடன் ஒரு பெரும் பொருளாதார மந்தம் நிச்சயமாக ஸ்பெயினை எதிர்நோக்கியுள்ளது. பொருளாதாரம் மட்டுமல்லாது அது பலவிதங்களிலும் ஸ்பெயின் மக்களைப் பாதிக்கும்' என்கிறார், சிவில்லியைச் சேர்ந்த பொருளாதாரப் பேராசிரியர் ஒருவர்!

எக்ஸ்போ – 92-க்கு இதுவரை தமிழ் சினிமாக்காரர்கள் போகவில்லை என்பது ஓர் ஆறுதலான விஷயம்!

– வி. சந்திரசேகரன்

இந்திய அரங்கின் ஒரு பகுதி...

